254. மகாஜன பதங்கள் - கி.மு.650 – 325 கி.மு.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

255. 16 மகாஜன பதங்கள் :

1) அங்கம் (கிழக்கு பிகார்) - தலைநகர்- சம்பா
2) மகதம் (தெற்கு பிகார்) - ” கிரிவிராஜா
3) காசி (வாரணாசி) - ” வாரணாசி
4) கோசலம் (அயோத்தி) - ” சிராவஸ்தி
5) வஜ்ஜி (வட பிகார்) - ” வைசாலி
6) மல்லநாடு (கோராக்பூர் மாவட்டம்) - ” குசிநாரா
7) சேதி (கங்கை-நர்மதைப் பகுதி) - ” சுக்திமதி
8) வம்ஸம் (வத்ஸம்-அலகாபாத் பகுதி)-” கொசாம்பி
9) குரு (தானேஸ்வரம், டெல்லி, மீரட்) - ” ஹஸ்தினாபூர்(இந்திரபிரஷ்தம்)
10) பாஞ்சாலம் (பரேலி) ” - ” கம்பில்லம்
11) மச்சம் (ஜெய்ப்பூர்) - ” விராட்
12) சூரசேனம்(மதுரா பகுதி) - ” மதுரா
13) அச்மகம் (கோதாவரி கரை) - ” பொட்னா
14) அவந்தி (மாளவப்பகுதி) - ” உஜ்ஜைனி
15) காந்தாரம்(பெஷாவர்,ராவல்பிண்டி) - ” தட்சசீலா
16) கம்போஜம்(தென்மேற்கு காஷ்மீர்) - ” துவாரகை (ராஜ்புட்)

256. மகதத்தை ஆட்சி செய்த வம்சங்கள் :

1) ஹர்யங்க வம்சம்
2) சிசுநாக வம்சம்
3) நந்த வம்சம்
4) மௌரிய வம்சம்
5) சுங்க வம்சம்
6) கன்வ வம்சம்

257. ஹர்யங்க வம்சத்தினைத் தோற்றுவித்தவர்-பிம்பிசாரர். இதன் தலைநகர் - இராஜகிருதம்
258. கங்கையும், சோன் ஆறும் கூடுமிடம்-பாடலிபுத்ரம். இங்கு கோட்டை கட்டியவன்-அஜாதசத்ரு
259. பாடலிபுத்திரத்தை தலைநகராக மாற்றியவர் - உதயன்.
260. ஹர்யங்க வம்சத்தின் கடைசி ஆட்சியாளர் - நாக்தஸக்.
261. சிசுநாகர் “சிசுநாக” வம்சத்தினை நிறுவிய வருடம் - கி.மு.413-363
இவர் தலைநகரை வைசாலிக்கு மாற்றினார்.
இதில் கடைசி அரசர் - காலசோகர் (396-391 கி.மு.)
262. மகதத்தினை ஆட்சி செய்த சத்திரியர் அல்லாத வம்சம் - நந்தர்
263. அலெக்சாண்டர் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தபோது மகத நாட்டு மன்னர் - தனநந்தர்.
264. தனநந்தரை வீழ்த்திய மௌரிய மன்னர் - சந்திரகுப்த மௌரியர்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

265. அலெக்சாண்டர் இந்தியாவின் செல்வச் செழிப்பினைப் பற்றி ஹெரோடோட்டஸ் மற்றும் அசிரியர்கள் மூலம் அறிந்தார்.

266. <u>அலெக்சாண்டர் படையெடுப்பின்போது இந்தியாவின் நிலைமை :</u>

<u>முடியாட்சி :</u>

1) தட்சசீலம் - ஸ்வாத் பள்ளத்தாக்கு ஆட்சியாளர் - அம்பி

2) ஜீலம் - சினா நதிகளுக்கிடையேயான பகுதி-பெரிய போரசு

3) சினாப் - ராவிநதிகளுக்கிடையேயான பகுதி-இளைய போரசு

4) சிந்து, சௌபதி பகுதி ஆட்சியாளர் - மௌசிகன்

5) உப்பு தொடர்ச்சி பகுதி – சோபிடிஸ்

<u>குடியாட்சி :</u>

1) ராவிப் பள்ளத்தாக்கை ஆண்ட மாளவர்கள் (மல்லோய்)

2) கீழைச் சினாப் பகுதியினையாண்ட அம்பஸ்தர்கள்

3) ராவி-பியாஸிற்கு இடைப்பட்ட பகுதியை ஆண்ட சூத்திரர்கள்.

4) ஜீலம், சீனாப் பகுதியை ஆண்ட சிபோஸ்

5) மகத மன்னர் - தனநந்தர்

267. ஜீலம் நதிப்போர் (கி.மு.326) – அலெக்ஸ் (vs) பெரிய போரஸ்.
268. அம்பி ஸ்வாத் பள்ளத்தாக்கை (தலைநகர் - தட்சசீலம் ஆட்சி புரிந்தார்.
269. அலெக்சாண்டரின் கடற்படைத் தளபதி – நியார்க்கஸ்
270. அலெக்சாண்டர் கி.மு.323-ல் பாபிலோனியாவில் தம்முடைய 33வது வயதில் காலமானார்.
271. புராணங்கள் குப்தர் காலத்தில்தான் தொகுக்கப்பட்டன.
272. தேக நிகாயா என்பது குறுங் கவிதைகளின் தொகுப்பு. இது 423 கவிதைகளில் புத்தரின் தர்மபதமும், அவரது புகழும் கூறப்பட்டுள்ளன.
273. சத்திரியக் குடியரசுகளின் விரிவாக்கமே மகாஜனபதாகக்களாகும்.
274. பிம்பிசாரர் ராஜகிருதத்தைப் பலமிக்க நகராக்கினார்.
275. பிம்பிசாரரை “சேனியா” என்றழைப்பர்.
276. அஜாதசத்ரு என்பதன் பொருள் “பிறப்பதற்கு முன் தந்தையின் விரோதி”
277. பிம்பிசாரர் மகதத்தின் அரசியல் எழுச்சிக்கான அடித்தளத்தை அமைத்தவர் எனலாம்.
278. பிம்பிசாரரின் மனைவி – கோசலாதேவி.
279. அஜாதசத்ரு பிசேனஜித்துடன் போர் புரிந்து கோசல நாட்டை இணைத்தார்.
280. அஜாதசத்ருவின் பிராமண அமைச்சர் - வசாகாரா. இவரை அனுப்பி லிச்சாசி அரசுகளிடையே பிளவை ஏற்படுத்தினார். இதைத் தோற்கடிக்க அஜாதசத்ருவிற்கு 16 ஆண்டுகள் தேவைப்பட்டது.
281. அஜாதசத்ரு சந்திரகுப்தமௌரியரின் முன்னோடி ஆவார்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

282. அஜாதசத்ரு 25 ஆண்டு காலம் ஆட்சி புரிந்தார்.
283. சிசுநாகர் காலத்தில் வைசாலி அரண்மனை நகராகவம், இராஜகிருதம் தலைநகராகவும் இருந்தது. பின்பு தலைநகரை வைசாலிக்கே மாற்றினார்.
284. சந்திரகுப்த மௌரியருக்கு முன்பு அதிக பகுதியை ஆட்சி செய்தவர் சிசுராகர்.
285. சிசுநாகர்கள் 30 ஆண்டுகள் ஆட்சி புரிந்தனர்.
286. நந்தர்கள் 9 பேர் ஆட்சி புரிந்தனர்.
287. மகாபத்ம நந்தர் இந்தியாவின் முதல் சூத்திரப் பேரரசர். இவர் சமண மதத்தவர்.
288. மோசிக்கீரனாரும், மாமூலனாரும் நந்த மன்னர்களைப் பற்றிக் கூறியுள்ளனர்.
289. இந்தியாவின் முதல் பெரிய பேரரசாகக் கருதப்படுவது – நந்தவம்சம்.
290. பாரசீக மன்னர் மகாசைரஸ் (கி.மு.558-530) அகமேனியப் பேரரசைத் தோற்றுவித்தார்.
291. சைரஸ் ஆற்றல் மிக்க விரிவாக்கவாதி எனலாம்.
292. மகாசைரசுக்குப் பின் முதலாம் டேரியஸ் (கி.மு.522-486) என பதிவு செய்தார்.
293. டேரியஸ் காலத்தில் 'சிந்து – பஞ்சாப்' பகுதி இவரின் 20-வது மாகாணமாக இருந்தது.
294. அராமிக் மொழி பாரசீகர்களின் நிர்வாக மொழியானது.
295. அர்த்தசாஸ்திரத்தின் மற்றொரு பெயர் - தண்டநீதி.
296. மௌரிய அரசர்கள்-சந்திரகுப்த மௌரியர், பிந்துசாரர், அசோகர், குணாளா, தசரதா, சம்பிரத்தி, சாலிசுகர், தேவவர்மன், சதாதம்பன், பிருகத்ரதன் (181 கி.மு.).297.இந்திய வரலாற்றில் தோன்றிய முதல் பேரரசு-மௌரியப் பேரரசு.
297. இந்தியாவிற்கு வந்த முதல் அயல்நாட்டுப் பயணி – மெகஸ்தனிஸ் (கிரேக்கம் - கி.மு.302-298).
298. சந்திரகுப்த மௌரியர் நந்தர்களைத் தோற்கடித்து "மௌரியப் பேரரசை" நிறுவிய வருடம் - கி.மு.325.
299. மௌரியர்களின் ஆட்சிமொழி – பிராகிருதம்.
300. சந்திரகுப்தரின் அவைக்கு மெகஸ்தனீஸை அனுப்பியவர் செல்யூகஸ் நிகேடார்.
301. சந்திரகுப்தருடன் கர்நாடகாவிற்கு வந்த சமணத் துறவி பத்திரபாகு.
302. "அமித்ரகதா" எனும் பெயர் பெற்ற மௌரிய மன்னர்-பிந்துசாரர்.
303. "பாப்ரு கல்வெட்டு" புத்தமதத்திற்கு அசோகர் மாறியதைப் பற்றிக் கூறுகிறது.
304. தராய் தூண்கள் - பத்தரின் பிறப்பு, உபதேசம், அசோகரின் சுற்றுப் பயணங்களையும் கூறுகிறது.
305. 14-ம் பாறைக் கல்வெட்டு-அசோகரின் நிர்வாகத்தைப் பற்றியும். அறக்கோட்பாடுகள் பற்றியும் கூறுகிறது.

306. சிறிய கற்பாறை ஆணைகள் - அசோகரின் முழுவாழ்க்கை வரலாறு மற்றும் அவரின் தம்மக் கோட்பாடுகளைப் பற்றிக் கூறுகிறது.

307. 4-ம் சிறு தூண் கல்வெட்டுகள்-நிலையாமையைப் பற்றிக் கூறுகிறது.

308. அசோகரின் கல்வெட்டுகளை கண்டுபிடித்தவர் பாத்ரோ டீபன்தாலர் (கி.பி. (1750).

309. அசோகரின் கல்வெட்டுகளை முதன் முதலில் படித்தவர் (பிரம்மி எழுத்து) ஜேம்ஸ்பிரின்சப் (1837).

310. அசோகரை புத்த மதத்திற்கு மாற்றியவர் மொகாலிபுத்ததிசா.

311. சோழர்கள்,கேரளபுத்திரர், பாண்டியர்கள், சத்திரப்புத்திரர்களைப் பற்றி கூறும் அசோகர் கல்வெட்டு 2 மற்றும் 13-ம் பாறைக் கல்வெட்டுகள்.

312. அசோகர்-என்ற பெயர் மட்டும் காணப்படும் கல்வெட்டுகள் மஸ்கி, குஜ்ரா.

313. அசோகரின் கல்வெட்டுகளில் பெரும்பாலும் பயன்படுத்திய எழுத்து-பிரம்மி.

314. மௌரிய வம்சத்தின் முக்கிய நிலவரி – பாகா.

315. மௌரிய ஆட்சியின் சிறப்பு-மைய மற்றும் நகர ஆட்சியாகும்.

316. துறைத்தலைவர்கள் -அமர்த்தியர்கள் எனப்பட்டனர். அசோகர் காலத்தில் இவர்கள் மகாமாத்திரர்கள் எனப்பட்டனர்.

317. மௌரியர் காலத்தில் அக்தியக்ஷர்கள் என்பவர்கள் கண்காணிப்பாளர்கள்.

318. நகர மக்களின் பிரதிநிதி அவை – பௌரா.

319. ஊர் மக்களின் பிரதிநிதி அவை – ஜனபதா

320. <u>மௌரியப் பேரரசில் மாநிலத் தலைநகரங்கள்:</u>

| | | |
|---|---|---|
| கிழக்கு | - | தோசாலி |
| மேற்கு | - | உஜ்ஜைனி |
| தெற்கு | - | சுவர்ணகிரி |
| வடக்கு | - | தட்சசீலம் |
| மையப்பகுதி | - | பாடலிபுத்திரம் |

321. நிலங்களை அளந்து எல்லையை அளக்கும் அதிகாரி – ராஜுகர்.

322. கோட்டாட்சி தலைவர் - பிரதேசிகர்

323. எல்லைப்புற அதிகாரி-அண்டமகாமாத்திரர்

324. மாவட்ட தலைமை அதிகாரிகள் - ஸ்தானிகர்

325. கிராம அதிகாரி–கோபா

326. பாடலிபுத்திர நகர நிர்வாகத்தை அறிய இண்டிகா உதவுகிறது.

327. அசோகரின் தம்மமதத்தைப் பரப்ப மகாமாத்திரர் என்பவர் நியமனம்.

328. மெகஸ்தனிஸ்-மௌரிய ஆட்சியின் சமூகம் 7 பிரிவுகளாக இருந்ததாகக் குறிப்பிடுகிறார்.

329. மௌரியப் பேரரசில் மைய அரசில் 18 துறைகள் இருந்தன.

330. வணிகர்கள்-ஸ்ரேணிகர் எனும் வணிகக் குழுவை அமைத்தனர். இதன் தலைவர்கள் பிரமுகர்கள் எனப்பட்டனர்.

331. அசோகர் காலத்தில் மௌரியப் பேரரசில் 5 பெரிய மாநிலங்கள் இருந்தன.

332. அரசுக்குச் சொந்தமான நிலங்கள் சிதா எனப்பட்டது.

333. மௌரியர் காலத்தில் 1/6 பங்கு வரியும், லும்பினியில் 1/8 பங்கும் வரி வசூலிக்கப்பட்டது.‘

334. ஆண்டுக்கொரு முறை மக்கள் தொகைக் கணக்கெடுப்பது மௌரிய ஆட்சி முறையின் ஒரு சிறப்பான கூறுபாடாகும்.

335. <u>மௌரியர் கால நாணயங்கள் :</u>

| | | |
|---|---|---|
| தங்கம் | - | நிஷ்கா |
| வெள்ளி | - | புராணா, தரணா |
| செப்பு | - | கார்ஷாபணம் |
| சிறிய செப்பு நாணயம் | - | காகனி |

*தக்காணத்தில் தங்கம், வெள்ளி நாணயங்களும் கார்ஷா பணம் என்றப் பெயரிலேயே வழங்கினர்.

336. பர்கத் ஸ்தூபி, போபாலுக்கு அருகே உள்ள சாஞ்சி ஸ்தூபி அசோகரால் கட்டப்பட்டது.

337. சாரநாத்திலுள்ள நான்கு சிங்கங்கள் ஸ்தூபி இந்திய அரசின் சின்னமாக பயன்படுத்தப்படுகிறது.

338. பிரகத்ரதாவைத் தோற்கடித்து புஷ்யமித்ர சுங்கர் (கி.மு.185-173) சுங்க மரபை நிறுவினார். இவர் அசோகரது ஸ்தூபிகளை அழித்தார்.

339. சுங்கர் காலத்தில் பதஞ்சலி “மகாபாஷ்யம்” என்ற நூலை எழுதினார்.

340. தாராநாத் (திபெத்) - இவரது நூல் திவ்யவதனம்.

341. அக்னிமித்திரர் - கி.மு.148ல் ஆட்சிக்கு வந்தார்.

342. சுங்கர்களின் கடைசி மன்னர்-தேவபூதி, இவரைத் தோற்கடித்து வாசுதேவர் கன்வ மரபை நிறுவினார்.

343. வாசுதேவர் (கன்வ மன்னர்) காலத்தில் மதுராக்கலை தோற்றுவிக்கப்பட்டது.

344. கன்வ வம்சத்தின் கடைசி மன்னர் - சூசர்மன்.

345. தென்னிந்தியாவில் தோன்றிய முதல் பேரரசு – சாதவாகனப் பேரரசு. இதைத் தோற்றுவித்தவர் - சிமுகா.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

346. முதலாம் சதகர்னி "தட்சினாதிபதி அப்ரதி காதசக்கரர்" எனும் விருதினைச் சூட்டிக் கொண்டார். அஸ்வமேத யாகமும் செய்தார்.

347. முதலாம் சதகர்னியின் இரண்டு மைந்தர்களாகிய வேதிஸ்ரீ, சதிஸ்ரீ இருவரும் தம் அன்னை நாயனிகா என்பவர் துணையுடன் ஆட்சி நடத்தினர்.

348. சாதாவாகணர்களில் சிறந்த ஆட்சியாளர் கௌதமிபுத்திர சதகர்னி ஆவார். இவரைப் பற்றிய கல்வெட்டு "நாசிக்" கல்வெட்டு.

349. சாதவாகணர்களின் கடைசி பெரிய மன்னர் "யக்ன ஸ்ரீசதகர்ணி". இவர் பெரிய கடற்படை வைத்திருந்ததால் "திரிசமுத்திராபதி" என்றழைக்கப்பட்டார்.

350. சாதவாகணர்களின் தலைநகரம் - ஸ்ரீகாகுளம், பைதான்(அ) பிரதிஸ்தானம்.

351. சாதவாகணர்களின் ஆட்சிமொழி-பிராகிருதம்.

352. "சப்தசதா" என்ற பிராகிருத நூலினை எழுதியவர் - ஹாலா.

353. கன்வர்களுக்குப் பின் இந்திய வரலாற்றில் சிறப்பான இடத்தைப் பெற்றவர்கள் - சாதவாகனர்களே.

354. <u>மௌரியப் பேரரசிற்கு பின் இந்தியாவின் வடமேற்குப் பகுதியை கைப்பற்றியவர்கள்:</u>
1) இந்தோ-கிரேக்கர் (பாக்டீரியர்கள்).
2) சாகர்கள் (சிந்தியர்கள்)
3) பார்த்தியர்கள், குஷாணர்கள் (யூச்சி)

355. சாதவாகனர்களுக்குப் பின்னர் ஆட்சி செலுத்திய ஆந்திர அரசர்கள் இக்ஷ்வாகர்கள். இவர்களின் தலைநகர் விஜயபுரியாகும்.

356. மகாபாரத்தின் தசரதர் இக்ஷ்வாகு வம்சத்தைச் சேர்ந்தவர்.

357. கலிங்கத்தில் சேதர்கள் சுயேட்சையாக ஆட்சி செய்தனர். இவர்களைப் பற்றி காரவேலரின் ஹதிகும்பா குகைப் பட்டயம் சொல்கிறது.

358. சேதர் வம்சத்தில்(மூன்றாவது அரசன் காரவேலன்) ஆவார்.

359. காரவேலர் (கி.மு.176 - 163), இவர் தமிழ் மன்னர்களை வென்றதையும், பாண்டிய முத்துக்களை கவர்ந்து சென்றதையும் ஹதிகும்பா கல்வெட்டு கூறுகிறது.

360. செல்யூகஸ் நிகேடாரின் பேரன் இரண்டாம் ஆன்டியோகஸ் ஆவார்.

361. பாக்டிரியாவின் வரலாற்றிலும், இந்திய வரலாற்றிலும் இடம் பெறத்தக்க சாதனைகளைப் புரிந்தவர் டிமெட்ரியஸ். (இவரது தந்தை யூதிடெமஸ்) அலெக்சாண்டருக்குப் பின் இந்தியாவின் மீது படையெடுப்புக்கள் நிகழ்த்தியவர்களில் முதன்மையானவர் எனக் குறிப்பிடலாம்.

362. கி.மு.140-லிருந்து 160 வரை பஞ்சாபில் ஆட்சி செய்தவர் மினாண்டர்.

363. இந்தோ-கிரேக்க ஆட்சியையைத் தோற்றுவித்தவர் - டெமிட்ரியஸ்.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

364. இந்தோ – கிரேக்க ஆட்சியாளர்களில் சிறந்தவர் - மினாண்டர்.

365. இந்தியாவில் முதன்முதலாக நாணயத்தை வெளியிட்டவர்கள் இந்தோ – கிரேக்கர்கள்.

366. ஹெரோடோட்டஸ் என்ற வரலாற்றாசிரியர் சாகர்களைப் பற்றிய செய்திகளைத் தருகிறார்.

367. மௌஸ் ( கி.மு 20 to கி.பி 22) வரை ஆட்சி செய்ததாக (காந்தாராவில்) தட்சசீலப் பட்டயம் எடுத்துரைக்கிறது.

368. உஜ்ஜைனியைச் சார்ந்த கடைசி ஷத்ரபு மூன்றாம் உருத்ரசிம்மராவார். இவரைக் கொன்றவர் இரண்டாம் சந்திரகுப்தர் ஆவார்.

369. சாக அரசர்களில் சிறந்த ஆட்சியாளர் - முதலாம் ருத்திரதாமன். இவரைப் பற்றி கிர்னார் கல்வெட்டு சொல்கிறது.

370. விக்ரம சகாப்தம் ( விக்ரமாதித்யா – உஜ்ஜைனி) கி.மு. 57 ஆகும்.

371. பார்த்திய ஆட்சியாளர்களில் சிறந்தவர் கோண்டோ பெர்னஸ். இவர் காலத்தில் இந்தியாவில் முதன் முதலாக கிறிஸ்துவ மதத்தைப் பரப்பியர் புனித தாமஸ்.

372. பானிணி என்ற இலக்கண மேதை “சப்தனுசாசனா” என்ற நூலைப் படைத்தார். இதில் 4000 சூத்திரங்களைக் கொண்ட இந்நூல் வார்த்தைகளைப் பற்றிய விஞ்ஞானமாகும். இவருக்குப் பின் வந்த மற்றொரு இலக்கண வல்லுனர் காத்யாயனர்.

373. பண்டைய இந்திய வரலாற்றில் மௌரியப் பேரரசுக்குப் பின் சுங்கப் பேரரசுதான் பரப்பில் பெரிய அரசாகும். இவர்கள் மகதத்தை மீட்டு 100 ஆண்டுகளுக்கு மேல் ஆட்சி செய்தனர்.

374. சுங்கர்கள் இந்தியாவை ஹீணர்களின் தாக்குதல்களிலிருந்து காப்பாற்றினர். இவர்கள் பிராமண சமயத்தை ஊக்கப்படுத்தினர். இந்தியாவில் பௌத்த சமயத்தின் செல்வாக்கு குறைவதற்கு இவர்களே காரணம்.

375. மனுவின் தர்மசாத்திரம் சுங்கர்கள் காலத்தில் இயற்றப்பட்டது. பதஞ்சலி முனிவரும் இக்காலமே.

376. கிர்னார் ஏரியை சந்திரகுப்த மௌரியர் காலத்தில் ஆளுநராக இருந்த புஷ்யகுப்தர் கட்டினார். இந்த ஏரியை மிகவும் பலப்படுத்தியவர் முதலாம் ருத்ரதாமன்.

377. மத்திய ஆசியாவிலிருந்து இந்தியாவின் மீது படையெடுத்து குடியேறியவர்கள் சாகர்கள் (மேற்கு சத்ரபுகள்).



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

378. சாகர்கள் 4 பிரிவினராக இருந்தனர்.

1) தட்சசீல சாகர்கள் - இவர்களில் தலைவர் மோகா. இவரது வாரிசான அசஸ் வட இந்தியாவின் கடைசி கிரேக்க மன்னரான ஹிப்போஷ்ராடோனசத் தோற்கடித்தார்.
2) மதுரா சாகர்கள் - இதன் ஆட்சியாளர் ரஜீல். இவரது நாணயத்தில் மகாசத்ரபா என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
3) மராத்திய சாகர்கள் - முதல் மன்னர் பூமகா. இவருக்குப் பின் வந்தவர் நாகபாணர். இவரது நாணயங்களில் பிரம்மி மற்றும் கரோஸ்தி எழுத்து வடிவங்களில் வெளியிட்டார்.
4) சௌராஷ்டியப் பகுதியை கார்த்தமாகா வம்சத்தைச் சேர்ந்தவர்கள் ஆட்சி செய்தனர். இதன் ஆட்சியாளர் சாஸ்தானா இவர்கள் குஷாணர்களின் கீழ் பணியாற்றியவர்கள்.

379. கனிஷ்கர் வெளியிட்ட நாணயங்களும், பதிவு செய்த கல்வெட்டுகளும் பெஷாவரிலிருந்துபனாரஸ் வரையிலும், உத்திரப்பிரதேசத்தில் உள்ள கோராக்பூரிலும் காணப்பட்டன.

380. கனிஷ்கர் 4-வது புத்த சமய மாநாட்டை காஷ்மீரில் கூட்டினார். அதில் 500 புத்த துறவிகள் பங்கேற்றனர். இதில் பெரும்பாலோர் ஹீனயானிகள். மாநாட்டின் தலைமை வாசுமித்திரர். அஸ்வகோசரும் கலந்து கொண்டார். மாநாட்டின் நோக்கம் புத்த மதத்தின் 18 பிரிவினரிடையே நிலவிய கருத்துவேறுபாடுகளைக் களைதல் ஆகும்.

381. <u>புத்தத் துறவிகள் :</u>

1) ஸ்தவிரவாடிகள் என்ற ஹீனயானிகள்.
2) சர்வஸ்திவாடிகள், மகாசங்கிகர்கள் என்ற மகாயானிகள்

- பௌத்த விளக்க உரைகள் மகாவிபாஷ்யமாகத் தொடுக்கப்பட்டது.

382. குஷாணர் காலம் இலக்கிய மறுமலர்ச்சிக் காலம் எனலாம்.

383. <u>கனிஷ்கர் அவையில் இடம் பெற்றவர்கள் :</u>

1) பார்ஸ்வாஸ் 2) வசுமித்திரர் 3) அஸ்வகோசர்
4) சரகர் 5) நாகார்ஜுனர்

384. கனிஷ்கர்கால கிரேக்க கட்டிடக் கலைஞர் "அகோஸ்லா"

385. கனிஷ்கர் காலத்தில் தட்சசீலத்தில் கட்டப்பட்ட சீர்சுக் நகரம் கட்டிடக் கலைக்கு சிறப்பு வாய்ந்தது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

386. கனிஷ்கர் காலம் கி.பி.78 – 120 வரை.

387. கனிஷ்கர் காலத்தில் தலைநகர் பெஷாவர் எனும் புருஷபுரம்.

388. இந்தியாவின் ஐன்ஸ்டீன் என அழைக்கப்பட்டவர் - நாகர்ஜுனர்.

389. குஷாணர்களின் கடைசி அரசர் வாசுதேவர்.

390. மகாயானம் பின்பற்றிய மொழி "சமஸ்கிருதம்".

391. காமந்தகர் எழுதிய நீதிசாரம், இது கௌடில்யரின் நூல் போன்றது.

392. நாரத சுமிரிதியும், பிரிகஸ்பதி ஸ்மிரிதியும் குப்த மன்னர்களின் நீதி நிர்வாகத்திற்கு வழிகாட்டி நூல்களாகப் பயன்படுத்தப்பட்டது.

393. <u>படைப்புகளும் அதன் ஆசிரியர்களும் :</u>

1) ராமதேவர் - கதாசரிதசாகரம்
2) பாஷர் - சுவப்னவாச வதத்தா, சந்திரகுப்த பாரிபிரிச்சா சேது பண்டிதா, காவிய மீமாம்சா, ஆயூர்வேத தீபிகா
3) ஜைனசேன சூரி - அரிவம்ச புராணம்.

394. விஷ்ணு புராணம் குப்தர்களை வைசிய சாதியைச் சேர்ந்தவர்கள் என குறிப்பிடுகிறது.

395. அலகாபாத் கல்தூண் கல்வெட்டு அசோகரது தூண் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது. இது நகரி வரிவடிவத்தில் உள்ளது. இது 11 வரிகளில் ஒரே வாக்கியத்தில் வழங்கப்பட்டுள்ளது.

396. சமுத்திரகுப்தர் நாகர்கள் மற்றும் வாகடகர்கள் போன்றோரை வென்றார். நாகர்களை வெற்றி கொண்டதற்கு அடையாளமாக அவர்களுடைய கருட சின்னத்தை அரச சின்னமாக்கினார்.

397. தங்களை "சாம்ராட்டுகள்" என அழைத்தவர்கள் "வாகடகர்கள்".

398. சமுத்ரகுப்தன் காலத்து இலங்கை மன்னர் "மேகவர்மன்". இவர் புத்தகயாவில் புத்த மடாலயம் கட்ட அனுமதி கோரினார்.

399. சமுத்ரகுப்தர் வெளியிட்ட நாணயங்களில் "மன்னர்களின் மன்னர்" எனக் குறிப்பிட்டார்.

400. இரண்டாம் சந்திரகுப்தர் மனைவி – குபேரநாகை (நாகர்குலம்). இவர்களது மகள் பிரபாவதியை தக்காணத்தை ஆட்சி செய்த இரண்டாம் ருத்ரசேனருக்கு மணம் முடித்தார்.

401. "புரோச்" துறைமுகம் வணிகத்திற்கு (ரோம்) முக்கியத்தவம் பெற்றதாக இருந்தது.

402. பாகியான் இந்தியாவில் 6 ஆண்டுகள் தங்கினார். இவர் பாடலிபுத்திரத்தில் 3 ஆண்டுகள் தங்கி சமஸ்கிருதம் பயின்றார்.

403. சந்திரகுப்த மௌரியரால் கட்டப்பட்ட "சுதர்சனா" ஏரியைக் காப்பாற்றியவர் ஸ்கந்தகுப்தர்.

404. ஹீணத்தலைவர்தோரமானர் குப்த வம்சத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தார். இவர் குப்தப் படையை குவாலியருக்கு அருகே தோற்கடித்தார்.

405. மிகிரகுலர் என்ற ஹீணத்தலைவர் நரசிம்மகுப்த பாலாதித்யா என்ற குப்த மன்னரிடம் கப்பம் வசூலித்தார்.

406. மந்திரி பரிஷத் என்ற அமைப்பு மன்னருக்கு ஆலோசனை வழங்கியது.

407. அமாத்தியர்கள் போன்ற அதிகார வர்க்கம் குப்தர் ஆட்சியின் எஃக்குச் சட்டமாகத் திகழ்ந்தது.

408. மாவட்டத் தலைமையகம் "அதிஸ்தானா" எனப்பட்டது.

409. குப்தர் கால உச்சநீதிமன்றம் "தர்மஸ்தானம்" எனப்பட்டது.

410. நீதிமன்ற ஆவணக்காப்பாளர்கள் "மகாக்ஷபதாவிகர்கள்" எனப்பட்டனர்.

411. ஸ்கந்தகுப்தரின் ஜீனகக் கல்வெட்டு நெருப்பு. நீர், நஞ்சு, சித்ரவதைகள் பற்றிக் கூறுகிறது.

412. குப்தர்காலப் பிற்பகுதியில் தங்க, வெள்ளி நாணயங்களுக்குப் பதிலாக செப்பு நாணயங்கள் வெளியிடப்பட்டன.

413. குப்தர் காலத்தில் ஐந்தாவது சாதி என்பவர்கள் - சண்டாளர்கள்.

414. குப்தர் காலத்தில் எந்தக் காரணத்தைக் கொண்டும் பிராமணனை அடிமையாக்கக் கூடாது என்று கூறியவர் காத்யாயனர்.

415. வாயு புராணத்தில் விஷ்ணுவின் 10 அவதாரங்கள் விவரிக்கப்பட்டுள்ளன. பகவத்கீதை குப்தர் காலத்திலிருந்து மிகவும் செல்வாக்கு பெற்றது.

416. குப்தர் காலத்தில் அசங்கா, வாசுபந்து, குமாரஜீவா, பர்மார்த்தா, திக்னகா போன்ற புத்த தத்துவ ஞானிகள் பிரபலமடைந்தனர்.

417. குப்தர் காலத்தில் பிராமணர்கள் மட்டும் "கட்டிகா" என்றழைக்கப்பட்ட இடங்களில் தம் பிள்ளைகளுக்கு குருகுலக்கல்வி அளித்தனர்.

418. குப்தர் காலத்தில் ஒரே அமைச்சரிடம் சிவில் மற்றும் ராணுவ அதிகாரங்கள் கொடுக்கப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

419. குப்தர் காலத்தில் "குமாரமாத்தியாக்கள்" என்போர் தற்கால மாவட்ட ஆட்சியருக்கு ஒப்பானவர்கள் ஆவர்.

420. மகாபிரதிகாரா – அரண்மனைக் காவல்படைத் தலைவர்.
சாந்திவிக்ரஹிதா – போர், அமைதி, வெளியுறவு அதிகாரி.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

421. குப்தர் காலத்தில் கிராமத்தில் நிலவரி வசூலிப்பவர் - வலத்சாசம்.

422. பாரவி – கிரத்தார்ஜீனியம் (மகா காவியமாகக் கருதப்பட்டது).

423. தண்டின் - தசகுமார சரிதம், காவிய தரிசனம்.

424. சுமந்து – வாசவதம்.

424. அமரசிம்மர் - இலக்கண மேதை, இவரது படைப்பான அமரகோசம் என்ற நாமலிங்கனுசாசனம் ஒரு சொல்லகராதி ஆகும்.

425. பஞ்சதந்திரக் கதைகள் - குப்தர் காலத்தில் எழுதப்பட்டவை. மேலும் புராணங்களும் முறைப்படுத்தப்பட்டன.

426. மனுசாத்திரம் - 2685 செய்யுள்களைக் கொண்டது.

427. குப்தர் காலத்தில் மீமாம்சிகா சபாரா எழுதிய “பாஷ்யம்” மிகவும் புகழ் பெற்றது.

428. வியாசரின் யோக பாஷ்யம் இந்திய தத்துவ வரலாற்றின் முக்கிய மைல்கல்லாகும்.

429. மகாநாமரின் இலங்கை வரலாறான மகாவம்சம் பாலி மொழியில் எழுதப்பட்டது.

430. புத்தகோசர் நிர்வாண நெறி மார்க்கம் என்ற நூலும், அவர் திரிபீடகத்திற்கு எழுதிய விளக்க உரையும் புத்தத்தத்துவத்துக்கு அளித்த கொடைகளாகும்.

431. அசங்கா என்பவர் எழுதியது – யோகசரா. வசுபந்து என்பவர் அசங்காவின் இளைய சகோதரர்.

432. குப்தர் காலத்தில் சித்தசேனா என்பவர் பிரபல சமண தத்துவர். இவரது நூல் நியாயவத்தா எனும் தத்துவ நூல் சிறப்பானது.

433. விரித்த வாகபட்டரின் அஷ்டங்க சம்கிரகம் எட்டு வகை மருத்துவ முறைகளை விவரிக்கிறது.

434. வராகமிகிரரின் பங்சசித்தாந்தகம் 5 வானவியல் முறைகளை விளக்குகின்றது. மேலும் இவர் எழுதிய பிரிகத் சம்கிதம் வானவியல், சோதிடம், புவியியல், தட்பவெட்பம், பெண்கள், திருமணம், சகுணங்கள் ஆகியவை பற்றிய கலைக் களஞ்சியமாகும்.

435. குப்தர்காலக் கட்டிடக்கலைக்கு உதாரணம் ஜபல்பூரில் உள்ள திருமால் கோயில், பூமராவில் காணப்படும் சிவன் கோயில், நச்சனிகுதாவில் உள்ள பார்வதி கோயில்.

436. குப்தர்காலக் குகைக் கோயில்கள்-மொகல்ராஜபுரம், உத்தவல்லி, அக்கண்ணமதுனம், உதயகிரி.

437. குப்தர்கால சிற்பக்கலை – சாரநாத்தில் அமர்ந்த வண்ணமுள்ள புத்தர்சிலை, சுல்தான்கஞ்சியிலுள்ள புத்தரின் செப்பு சிலையும்.

438. டெல்லியிலுள்ள (மெக்ருலி) இரும்புத்தூண் - 23 அடி, 8 அங்குலம், 6 டன் எடையுள்ளது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

439. ஸ்கந்த குப்தர் பித்தாரியில் எழுப்பிய ஒற்றைத் தூண்.

440. குப்தர்கால ஓவியக்கலை – 3 வகைப்படும்.

1) குவாலியரிலுள்ள – பாக் குகைகள்
2) அஜந்தா குகை ஓவியங்கள் - மகாராஷ்டிரா
3) சிகிரியா ஓவியம் - இலங்கை

441. ஹர்ஷருக்கு முடிசூட்டப்பட்டபோது (606-ல்) அவருக்கு வயது 16.

442. ஹர்ஷசரிதம் சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட நூல்.

443. யுவான் சுவாங் ஹர்ஷப் பேரரசில் 8 ஆண்டுகள் தங்கியிருந்தார்.

444. பிரபாகரவர்த்தனர் தானேஸ்வரத்தை பேரரசாக விரிவுபடுத்தினார். இவரது தாய் மகாசேனகுப்தா, மனைவி யசோமதி.

445. ஹர்ஷர், தனது தங்கையின் கணவரைக் கொன்ற சசாங்கனைத் தண்டிக்கஅஸ்ஸாம் அரசர் பாஸ்கரவர்மனோடு ராணுவக் கூட்டு சேர்ந்தார்.

446. ஹர்ஷர் காலத்து மாளவ மன்னர் தேவகுப்தா.

447. ஹர்ஷர் இராம் துருவசேனரைத் தோற்கடித்து வல்லபியை இணைத்தார். பின்பு தன் மகளையும் மணம் முடித்தார்.

448. ஹர்ஷர் சீனாவிற்கு தூதுக் குழுவினை அனுப்பினார்.

449. ஹர்ஷர் கஞ்சம் என்றப் பகுதியைக் கைப்பற்றிய வருடம் - 643.

450. யுவாங் சுவாங் ஹர்ஷரை "சீலாத்தியன்" என அழைத்தார்.

451. ஹர்ஷர் 647-ல் இறந்தார். அவரது வாரிசுகள் யசோவர்மன், இந்திரராஜா.

452. வர்த்தன வம்சத்தைத் தோற்றுவித்த புஷ்யபூதி சிவனை வழிபட்டார்.

453. ஹர்ஷர் சூரிய வழிபாட்டாராயிருந்து பின்பு புத்த மதத்திற்கு மாறியவர். (முதலில் ஹீனயானம் பின்பு மகாயானம்).

454. கன்னோசி மாநாடு யுவான் சுவாங் தலைமையில் நடைபெற்றது. இதில் 20 அரசர்கள், இது 23 நாட்கள் நடைபெற்றது. இப்பேரவை நடைபெற்ற ஆண்டு கி.பி.643.

455. அலகாபாத் பேரவை, கி.பி.643. ஹர்ஷர் ஐந்தாண்டுகளுக்கொரு முறை சர்வ சமயப் பேரவையைக் கூட்டி பரிசுப் பொருட்கள் வழங்குவார். இவர் 6-வது பேரவைக் கூட்டத்திற்கு வருமாறு சீனப்பயணி யுவான் சுவாங்கை அழைத்தார். அலகாபாத் பேரவை 75 நாட்கள் நடைபெற்றது.

456. ஹர்ஷர் காலத்தில் அதிகாரப்பூர்வமான ஆவணங்களும், கால அட்டவணைகளும் நீலோபிது என அழைக்கப்பட்டன.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

457. ஹர்ஷர் காலத்தில் வைசாலி சமண சமயத்தின் குவிமையமாக இருந்தது.

458. ஹர்ஷர் காலத்தில் பிரயாகையும், பனாரசும் பிராமண சமயக் கோட்டைகளாக இருந்தன.

459. ஹர்ஷரின் நாகாநந்தம் என்ற நாடகம் தத்துவச் சிறப்புமிக்கது.

460. பாணர் பார்வதி பரிணயம், சண்டிசதகா ஆகிய நாடகங்களையும் இயற்றினார்.

461. ஹர்ஷர் புலவர்களை கவிதைகள் புனையச் செய்து, அவற்றைத் தொகுத்து ஜதகமாலை எனப் பெயரிட்டார். இது புத்தரின் முற்பிறவிகளைப் பற்றியவை.

462. நாளந்தா பல்கலைக் கழகத்தில் தீங்நாகா, ஸ்திரமதி, தர்மபாலர், சிலபத்திரர் போன்ற பெரும் புகழ் பெற்ற பேராசிரியர்கள் பணியாற்றினர்.

463. நாளந்தா பல்கலைக் கழகத்தின் மூளையாக இருந்தது அதன் நூலகம்தான். இந்நூலகம் வாய்மையின் கருவூலம், உண்மையின் சிகரம் என்று அழைப்பு, இந்த நூலகம் மூன்றாகப் பிரிக்கப்பட்டிருந்தது.

1) ரத்னசாகரம்
2) ரத்னோததி
3) ரத்னரஞ்ஜகா

464. ஹர்ஷர் கால கற்கோயில் சிற்ப வளத்துக்கு சிர்பூர் என்ற இடத்தில் காணப்படும் லட்சுமணன் கோயில்.

465. குவாலியர் மண்டசோர் தூண் கல்வெட்டு, குவாலியர் கல்வெட்டு ஆகிய இரண்டும் கோவிந்தர் பொறித்துள்ளார். இவை மால்வாவின் மன்னன் யசோதர்மனின் (கி.பி.730 – 770). ஆட்சிக்காலம் பற்றித் தெரிவிக்கிறது.

466. பிற்கால குப்த வம்சத்தினைத் தோற்றுவித்தவர் - கிருஷ்ணகுப்தர்.

467. ஆதித்யசேனர் பிற்கால குப்த அரசைப் பேரரசாக்கினார். இவரது அப்சத் கல்வெட்டு பிற்கால குப்தர்களைப்பற்றி தெரிவிக்கின்றன.

468. ஹர்ஷப் பேரரசின் வீழ்ச்சிக்குப் பின் வட இந்தியாவில் நிலவிய குழப்பத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தவர்கள் ராஜபுத்திரர்கள் என அழைக்கப்படும் கூர்ஜரப் பிரதிகாரர்கள் ஆவர்.

469. கவிராஜா என அழைக்கப்பட்டவர் - சமுத்ரகுப்தர்.

470. தென்னிந்தியாவின் மீது படையெடுத்து வெற்றி கண்ட முதல் பேரரசர் - சமுத்திரகுப்தர்.

471. சமுத்ரகுப்தரை“இந்திய நெப்போலியன்” என அழைத்தவர் “வி.ஏ.ஸ்மித்”.

472. சமுத்ரகுப்தரால் ஆதரிக்கப்பட்டவர் - ஹரிசேனர், வசுபந்து.

473. II–ம்சந்திரகுப்தர் காலத்தில் தலைநகர் உஜ்ஜையினி.

474. நவரத்தினங்கள் என்ற அமைச்சரவை - IIம் சந்திரகுப்தர் காலம்.

475. பாஹியான் எழுதிய நூல் - போகோஜீ.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

476. நாளந்தா பல்கலைக் கழகம் இந்தியாவில் ஆக்ஸ்போர்டு என அழைக்கப்படுகிறது.

477. முதன்முதலில் ஹீனர்களின் படையெடுப்பை சந்தித்த குப்த மன்னர் குமாரகுப்தர்.

478. ஸ்கந்தகுப்தர் காலத்தில் ஹீணர்கள் படையெடுப்பு கி.பி.465-ல்.

479. குப்த வம்சத்தின் கடைசி மன்னர் - புத்த குப்தர் (விஷ்ணுகுப்தர்).

480. பூமிக்கு ஈர்ப்பு சக்தி உண்டு எனக் கூறியவர் - வராகமிகிரர்.

481. குப்த நிர்வாகம் : இராஷ்டிரம் - புத்தி – விஷயம் - கிராமம்.

482. தங்க நாணயத்தை அதிக அளவில் வெளியிட்டவர்கள் - குப்தர்கள்.

483. <u>கட்டிடக் கலையின் சிறப்பம்சம் :</u>

1) தென்னிந்தியா - திராவிடக்கலை - விமானம்
2) மத்திய இந்தியா- வேசரா - விமானம்
3) வடஇந்தியா - நாகராகலை - சிக்காரா

484. ஹர்ஷர் காலத்தில் இரண்டாவது தலைநகர் - கன்னோசி.

485. யுவான் சுவாங் எழுதிய நூல் - சியூக்கி.

486. இந்தியாவின் கடைசி சிறந்த இந்துப் பேரரசர் - ஹர்ஷர்.

487. தற்கால சாக்கியமுனி என அழைக்கப்பட்டவர் - யுவான் சுவாங்.

488. நாளந்தா பல்கலைக் கழகத்தின் (உச்ச நிலையின்போது) துணை வேந்தராக காஞ்சிபுரத்து தர்மபாலர் இருந்தார்.

489. பதாமிசாளுக்கியர்கள் "மேலைச் சாளுக்கியர்கள்" என அழைக்கப்பட்டனர். இவர்கள் தலைநகரம் - வாதாபி. இவ்வம்சத்தினை உருவாக்கியவர் முதலாம் புலிகேசி (543 – 566 கி.பி. )

490. மகாகூதா கல்வெட்டு முதலாம் கீர்த்திவர்மனைப் பற்றிக் கூறுகிறது.

491. இரண்டாம் புலிகேசி ஹர்ஷரையும், மகேந்திரவர்ம பல்லவனையும் வென்றார்.

492. கி.பி. 625 – 26ல் பாரசீக மன்னர் இரண்டாம் குஸ்ருவின் அவைக்கு II-ம் புலிகேசி தூதுக்குழுவினை அனுப்பினார்.

493. வாதாபி சாளுக்கிய மன்னர்களில் கடைசி - இரண்டாம் கீர்த்திவர்மன்.

494. கல்யாணி சாளுக்ய வம்சமே "பிற்கால மேலைச் சாளுக்கியர்" ஆவர். இதைத் தோற்றுவித்தவர் இரண்டாம் தைலப்பர் (973 – 997).

495. பில்ஹணரின் விக்கிரமங்க சரிதத்தில் ஆறாம் விக்ரமாதித்யரின் இளமைப் பருவம், வீரம் கூறப்பட்டுள்ளது.



Kindly Send me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

496. கீழைச்சாளுக்ய வம்சத்தினை தோற்றுவித்தவர் - விஷ்ணுவர்த்தன் (615 – 633). இவரது தலைநகரம் பாஷ்டபுரா, பிறகு வெங்கிக்கு மாற்றப்பட்டது. இறுதியாக ராஜமகேந்திரகிரிக்கு மாற்றப்பட்டது. இவ்வம்சத்தின் கடைசி மன்னர் ஆறாம் விஜயாதித்யன் (948 – 70).

497. இராஷ்டிரகா அரசை நிறுவியவர் தந்திதுர்க்கன் (753 – 758) இவர் மேலைச்சாளுக்கியர்களுக்கு அடங்கிய சிற்றரசராக இருந்தார். இவர் கி.பி.757ல் இரண்டாம் கீர்த்திவர்மனை காண்டேஷ் போரில் வென்றார்.

498. எல்லோராவிலுள்ள கைலாசநாதர் கோவிலைக் கட்டியவர் முதலாம் கிருஷ்ணன் (கி.பி.758-773) ஆவார்.

499.இராஷ்டிரகூடர்களில் தலைசிறந்தவர் - மூன்றாம் கோவிந்தன். (793- 814) ஆவார்.

500. மான்யகேதம் என்ற நகரை நிர்மானித்த ராஷ்டிரகூட மன்னர் அமோகவர்ஷன் (கி.பி.814-878). இவர் சமண சமயத்தை ஆதரித்தார். இவரது நூல் கவிராஜ மார்க்கம் ஆகும்.

501. இராஷ்டிரகூடர்களில் கடைசி மன்னர் - இரண்டாம் கார்கன். இவரை சாளுக்ய மன்னர் இரண்டாம் தைலப்பா வீழ்த்தி ஆட்சியைக் கைப்பற்றினார். கி.பி.975ல் இவர்கள் ஆட்சி முடிவுற்றது.

502. இராஷ்டிரகூடர்கள் நிலவரியாக 1/4 பங்கு வசூலித்தனர்.

503. <u>இராஷ்டிரகூடர்களின் இலக்கிய வளர்ச்சி :</u>

1) ஆதிபுராணம் - சமணசேனர்
2) கணித சாராம்கிரகம் - மகாவீர ஆச்சாரி
3) அமோக விருத்தி - சகத்தியானர்

* அமோகவர்ஷர் மற்றும் இரண்டாம் கிருஷ்ணர் ஆகிய இருவரும் சமணர்கள்.

504. எல்லோரா, எலிபெண்டா குகைக் கோவில்கள் இவர்கள் ஆட்சிக் காலத்தைச் சார்ந்தவை.

505. எல்லோராவில் 34 குகைகள் உள்ளன.

- ❖ 12 புத்தக் குகைள்
- ❖ 17 இந்து கோவில்கள்
- ❖ 5 சமண கோவில்கள்

506. பட்டாடக்கல்லில் லோகேஸ்சுவரர் ஆலயமும் இவர்கள் காலத்தைச் சார்ந்தவை.

**- ALL THE BEST -**